**வென்றுவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்**
**WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE**
**Girraween Public School, Bando Road, Girraween, NSW 2145**

**தமிழ் அறிவுப் போட்டிகளுக்கான விதிமுறைகள்**

# தமிழ் அறிவுப்போட்டி 2019:

## புகுநிலை மற்றும் இணைப்பு வகுப்புக்களிற்கு

- பேச்சுத் தமிழ் மாணவர்களிற்கும், இணைப்பு வகுப்பு மாணவர்களிற்கும் புகுநிலை வகுப்பு மாணவர்களிற்கும் 26-10-2019ம் திகதி அன்று அவர்களின் வகுப்புகளில் தமிழ் அறிவுப் போட்டிகள் நடைபெறும்.
- ஒவ்வொரு வகுப்புகளிற்கும் மாதிரி வினாக்கள் எமது இணையத்தளத்தில் தரப்பட்டுள்ளது. நீங்கள் wtsc.org.au என்னும் இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### போட்டிக்கான வினாக்கள்

1. பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள்.
2. படங்களிற்கான பெயர் சொல்லுதல்.
3. தமிழ் தொடர்பான பொது அறிவுகள்.

### போட்டி விதிமுறைகள்

1. 10 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும்.
2. 70% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 30% மான வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
3. மாணவர்கள் ஒவ்வொருவராக கணினியில் உள்ள வினாக்களிற்கு விடையளிக்க வேண்டும்.
4. ஒவ்வொரு வினாக்களிற்கும் 30 வினாடிகள் மாத்திரமே கொடுக்கப்படும்.
5. மாணவர்கள் வினாக்களை வாசிக்க நடுவர்களின் உதவியை நாடினால் அவர்களிற்கு சில புள்ளிகள் குறைக்கப்படும்.
6. நடுவர்களாக வகுப்பு ஆசிரியர்களும் பெற்றோர் ஒருவரும் (பிள்ளைகள் அந்த வகுப்பில் இல்லாத பெற்றோர்) கடமையாற்றுவார்கள்.

### பரிசில்கள்:

முதல் மூன்று இடங்களை பெறும் மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கப்படும்.
பங்குபற்றிய அனைத்து மாணவர்களிற்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.